# கிளிட்டோரிஸ் : ஆப்பிரிக்காவிலிருந்து ஆசியா வரை

• ஸர்மிளா ஸெய்யித்

பிறப்புறுப்புச் சிதைக்கப்பட்டு உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் 200 மில்லியன் சிறுமிகள் மற்றும் பெண்களில் ஒருத்தி, பண்பாட்டுப் பழக்கம் இன்னும் புழக்கத்தில் இருக்கின்ற சமூகமொன்றினது உறுப்பினள் போன்ற இன்னும் என்னவாறான தகைமைகள் இதைப்பற்றிப் பேசுவதற்குத்தேவைப்படலாம்!

பெண் பிறப்பு உறுப்பு சிதைப்பு (Female Genital Mutilation – FGM), பெண் விருத்தசேதனம் (Female Circumcision) ஆகிய சொல்லாடல்கள் சில ஆண்கள்,மதவாதிகள், சமூக கலாசாரக் காவலர்களுக்கு அலர்ஜியாக இருக்கலாம். இனஒடுக்குதல்களாலும், வறுமையினாலும் உழன்று கொண்டிருக்கும் ஆப்பிரிக்கமக்களுக்கு மட்டுமே விதிக்கப்பட்ட சாபம் என்பதாக இந்தக் கொடுமை பற்றி மனச்சாட்சியே இல்லாத அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கலாம். ஆப்பிரிக்காவிலும் முஸ்லிம்கள் அல்லாத பழங்குடியினர்கள் மத்தியில் மட்டும்தான் இந்தப் பண்பாடு இருக்கின்றதென்பதாக மானிடத்திற்கு எதிரான அவர்களது மனங்கள் அமைதி கொள்ளலாம். இவர்கள் தங்களது சொந்தவீட்டுக்குள்ளும் அயலிலும் நடக்கின்ற மாபெரும் அநீதியைப் பற்றியஅக்கறையற்றவர்களாக இருந்துகொண்டு மதத்திலிருந்து ‘ஆகுமாக்கப்பட்ட’ ஆதாரங்களையும் ‘தடுக்கப்பட்ட’ ஆதாரங்களையும் காண்பித்துத் தங்களுக்குள்ளே முரண்பட்டுக்

கொண்டிருப்பவர்கள். மனச்சாட்சியை உலுக்குகின்ற ஒரு செயற்பாட்டைத் தடுப்பதற்குக்கூட மூவாயிரம் ஆண்டுகள் பழைமையான கோப்புகளுக்குள்தான் ஆதாரம் தேடியாக வேண்டிய கண்மூடித்தனமான பாதையில்தான் நவீன நூற்றாண்டு பயணித்துக் கொண்டிருக்கின்றது. தங்கள் கால்களில் முள் குத்தினால்கூட எடுத்துவிடுவதா வேண்டாமா என்று மூவாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த மேற்கோள்களிலிருந்தே தீர்மானம் எடுப்போம் என்பதாகப் பிடிவாதமாக இருக்கும் பழைமைவாதிகளிடம் வேறென்ன மாதிரியான எதிர்வினையைநாம் எதிர்பார்க்க முடியும்? மனசாட்சியின் நரம்புகள் அறுந்து 'மதம்' முற்றிய பித்தர்களைச் சகித்துக் கொண்டுதான் பல காரியங்களைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆப்பிரிக்க நாடுகளில் மட்டுமல்ல, மத்திய கிழக்கு நாடுகள், ஆசிய நாடுகள்,லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளிலும் மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்கா,அவுஸ்திரேலியா, நியுஸிலாந்து நாடுகளில் குடியேறிய மக்களிடத்திலும் கிளிட்டோரிஸ் நீக்கம் செய்யும் வன் கொடுமை இன்றும் நடந்து கொண்டிருக்கின்றது.

பெண்ணுறுப்பின் உள் உதடுகளில் சிதைப்பை ஏற்படுத்துவதனால் மருத்துவரீதியான நன்மைகள் ஏதும் உண்டா? இதனால் பெண் குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கோ உடல் நலனுக்கோ நன்மைகள் விளையுமா? இதைக் குறித்த எந்தவொரு தெளிவும் விளக்கமும் ஒய்த்தா மாமிகளுக்குத்தெரியாது. கூர் மினுங்கும் புதிய பிளேட்டும், வெண்ணிற துணித்துண்டும் கையுமாக வந்து இந்தக் கடமையைச் செய்கிறவர்களை இலங்கை, கிழக்குமுஸ்லிம்கள் இப்படித்தான் அழைக்கிறார்கள். சில பிரதேசங்களில் 'ஒஸ்தாமாமி' என்றும் சில பிரதேசங்களில் 'ஒய்த்தா மாமி' என்றும்அழைக்கப்படுகின்ற இவர்கள் சந்ததி வழியாக இதே தொழிலைச் செய்கிறவர்கள். பெண் குழந்தை பிறந்த நாற்பதாவது நாளில் பெரும்பாலும் முடிநீக்கம் செய்து, குளிப்பாட்டிப் புத்தாடை அணிவித்து இந்தச் சடங்குக்குக் குழந்தையைத் தயார்ப்படுத்துகிறார்கள். இந்தச் சடங்கு பெரும்பாலும் பெண்களை உள்வாங்கிய செயற்பாடாக இருப்பதனாலேயே இது இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்றும் சொல்லலாம். தாயோ, தாயின் தாயோ வெள்ளைத் துணி விரித்த பித்தளை வட்டாவின் மீது குழந்தையின் பிஞ்சுத் தொடைகளை அகல ஊன்றிப் பிடிக்க 'ஒய்த்தா மாமி' குழந்தையின் பிறப்புறுப்பில் பிளேட்டினால் இரத்தம் கசியக் கீறிச் சுத்தமான வெண்ணிறச்சாம்பலைக் கிள்ளிக் காயத்தில் போட்டு விடுவாள். குழந்தை வீறிட்டு அழும். இந்தப் பெண்களோ அழுகின்ற குழந்தையை அரவணைத்துக் கொண்டே சிரித்து மகிழ்வார்கள். இவர்களைப் பொறுத்தமட்டில் மிகமுக்கியமான மத – பண்பாட்டுக் கடமைகளிலொன்றை நிறைவேற்றி விட்டார்கள். 'பாலியல் ஒழுக்கம்' மிக்க பெண்ணாக

குழந்தை வளர்ந்துவாழ்வதற்கு அடித்தளமிட்டுள்ளார்கள். 'கிளிட்டோரிஸ் துண்டிப்புச்'சடங்கினால் இப்படியான 'நன்மைகளை' நிலைநாட்டிவிட முடியும் என்பதே இவர்களது நம்பிக்கை. இவர்களுக்கு இது இனத்தின் கௌரவத்தைக் காப்பாற்றும் பெருந்தியாகம்.

இப்படிக் கிளிட்டோரிஸ் நீக்கம் செய்வதால் எப்படிப் பெண்ணின் 'பாலியல் ஒழுக்கத்தை'(?) இவர்கள் காப்பாற்றுகிறார்கள்? கிளிட்டோரிஸ் என்பது பெண்ணுறுப்பில் காணப்படும் உணர் குவியம் அல்லது மையம். பெண்ணுறுப்பின் இப்பகுதியே ஒரு பெண்ணினது பாலியல் உணர்வுகளைத் தீர்மானிப்பதாக காலங்காலமாக நம்புகிற மக்கள் இதனை நீக்கிவிடுவதன் அரசியல் என்ன?பால் உறவின் போதாமையை உணர்கின்ற ஒரு பெண்ணுக்கு ஓர் ஆணைநிராகரிக்க வேறு காரணங்கள் தேவையில்லை என்கின்ற அச்ச உணர்வே,கிளிட்டோரிஸை நீக்குவதற்கு அல்லது சிதைப்பதற்குப் பின்னாலுள்ள ஆண்களின் அரசியல். பெண்ணை எப்போதும் 'ஒருவனுக்கு ஒருத்தியாக' சவக்கிடங்காகக் கிடக்கச் செய்வதற்காகவே இந்தச் சடங்குகொண்டுவரப்பட்டது. எளிதாகச் சொல்வதென்றால் பந்தயத்தில் தான் மட்டுமே சாம்பியனாக இருக்கவேண்டுமென்று சக போட்டியாளரின்கால்களை ஒடித்துவிடுவதுதான் இது.

இந்த நம்பிக்கை மத ரீதியானது என்றாலும், மத ரீதியானது இல்லை என்றாலும் இது பெண் குழந்தைகள் மீதான அப்பட்டமான மனித உரிமை மீறும் வன்முறைச் செயல். இந்த இடத்தில் இன்னுமொன்றையும் கவனிக்கவேண்டும். அதாவது ஆண் உறுப்பில் முன் தோல் அகற்றுதல். 'கத்னா' என்று அழைக்கப்படுகின்ற இந்த வழக்கம் இஸ்லாமியர்கள் மத்தியில் 'சுன்னத்' ஆன கடமை. உங்களில் யாராவது கேட்கலாம், ஆண் பிறப்புறுப்பில் முன்தோலை நீக்குவது வன்கொடுமை இல்லையா, மனித உரிமை மீறல் கிடையாதா? அது என்ன பெண்ணுறுப்புச் சிதைப்பை மட்டும் வன்கொடுமை என்றும் உரிமை மீறல் என்றும் சொல்கிறீர்கள் என்று. ஆண் பிறப்பு உறுப்பில் முன் தோல் நீக்கம் செய்வது மருத்துவ ரீதியாகச் சரி காணப்பட்ட ஒரு செயற்பாடு. இது இஸ்லாமியர்களின் பண்பாடுஎன்ற போதிலும், சுகாதார நோக்கத்துடனும், குறி விறைப்பின்போது பின்னுக்குத் தள்ளப்படாத நிலையிலும் எந்தவொரு ஆணும் அதாவது எந்த இனத்தை மதத்தைச் சேர்ந்தவராயினும் முன்தோலை அறுவைச் சிகிச்சை செய்து அகற்றிக் கொள்ளமுடியும். கிராமப் புறங்களில் 'ஒய்த்தா மாமா' என்று அழைக்கப்படும் சந்ததி வழியாக இதனைச் செய்வதில் புலமைத்துவம்பெற்றவர்களால் இந்தச் சடங்கு செய்யப்பட்டு வருகின்றது. நகரப் புறங்களில் வைத்தியசாலைகளில் வலி தெரியாதவண்ணம் மருத்துவக் கண்காணிப்பில் மிக நூதனமாகவே ஆண் உறுப்பு முன் தோல் நீக்கம் நடைமுறையில் உள்ளது.

ஆண் பிள்ளைகளுக்கு ‘கத்னா’ செய்யும் நிகழ்வு இலங்கை கிழக்கு மாகாண மக்களின் பண்பாட்டில் ஒரு கொண்டாட்டமாக இருந்த காலமொன்று இருந்தது. அயலார், உறவினர் மற்றும் ஊர்க்காரரர்களை அழைத்து , மாடு வெட்டி விருந்தளித்துக் கோலாகலமாக இச்சடங்கு நடக்கும். கத்னா செய்யப்பட்ட ஆணுறுப்பு பூரண சுகம் பெறும் வரையிலும் நாலைந்துபேர் அந்தச் சிறுவனைச் சுற்றிக்காவல் இருப்பார்கள். உறக்கத்தில் கால்களைப் பிணைத்துக்கொண்டாலோ குப்புறப் புரண்டாலோ மரத்தால் விழுந்தவனை மாடு மிதித்த கதையாக்கிவிடும். உறக்கம் விழித்துக் கண்ணும் கருத்துமாக நாலைந்து பேர் சீட்டாடிக் கொண்டும் கேரம் போர்ட் விளையாடிக் கொண்டுமிருப்பார்கள். ஈக்கள், கொசுக்கள் அண்டாதிருக்கக் கூரையின் மேல் விட்டத்தில் கயிறு இழுத்து ஒரு வெள்ளைத் துணியைத் தொங்கவிட்டுக் கால்கள் விரித்துக் கிடக்கும் சிறுவனது உடலின் கீழ்ப்பாகத்தை மூடச் செய்திருப்பார்கள். கிட்டத்தட்ட கொசு வலையை ஒத்த இந்த வெண்ணிறத் துணி வலை புண் முழுவதும் ஆறுகிற வரையும் தொங்கிக் கொண்டிருக்கும். கடந்த பத்தாண்டு காலத்திற்குள்தான் இந்தக் கொண்டாட்டம் நிறுத்தப்பட்டிருக்கவேண்டும். இப்போதெல்லாம் ஆண் குழந்தை பிறந்த ஏழாவதோ பதினைந்தாவதோ நாளில் டாக்டர்களிடம் தூக்கிச் சென்று காதும் காதும் வைத்தாற்போல ‘நாகரீகமாகக்’ காரியத்தை முடித்துவிடுகிறார்கள்.

‘கிளிட்டோரிஸ்’ எனப்படும் பெண்ணுறுப்புத் துண்டிப்புச் சடங்கு பெரும்பாலும் குழந்தை பிறந்து நாற்பதாவது நாள் செய்யப்படுகின்றது. குழந்தைகள் வளர்வதற்கு முன்பே உடலில் செய்யப்படுகின்ற மாறுதல் ‘இதுவே தனது உடல்’ என்பதாக நம்பும்படியும், பருவ உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாதபடியும் செய்துவிடுகின்றது. கிளிட்டோரிஸ் சிதைக்கப்பட்ட பெண்களின் பாலியல் இன்பம் மட்டுப்படுத்தப்பட்டதா என்பதை ஆராயும் பல ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வுகள், தன் வரலாற்று நூல்கள், ஆவணப்படங்கள் வெளிவந்துள்ளன.

கிளிட்டோரிஸ் நீக்கும் சடங்கு குழந்தைகளை மரணிக்கச் செய்யவும் கூடியது. சில குழந்தைகள் திகைப்பு *(Hemorrhaging)* என்கிற உள அதிர்விலிருந்து மீள்வதற்கு நாளெடுக்கும். இந்தக் குழந்தைகள் உளப்பிறழ்வு, மூளைப் பாதிப்புக்கு ஆளாகவும் இடமுண்டு. தொடர் இரத்த ஒழுக்கு *(Vaginal Bleeding)*, சிறுநீர் எரிச்சல், பிறப்புறுப்பில் நீர்கட்டிகள் உருவாக்கம், தொற்றுகள், தோல் அரிப்பு மற்றும் மலட்டுத்தன்மை போன்ற நோய்கள் உருவாகுவதற்கும் இது காரணமாகக் கூடியது என்று சில மருத்துவ ஆய்வுகள் நிரூபணம் செய்கின்றன.

கொடுமையான இந்தப் பண்பாட்டுப் பழக்கம் 200 வருடங்களாக இலங்கையில் இஸ்லாமியர் வாழும் பகுதிகளில் புழக்கத்தில் இருக்கலாம்

என்பதாக கிளிட்டோரிஸ் நீக்கம் குறித்து *1996* இல் *SRI LANKA CULTURE: Mothers Watch as Daughters are Circumcised* என்ற கட்டுரையில் ரேணுகா சேனநாயக்க பதிவு செய்துள்ளார். அரேபிய வர்த்தகர்கள், மனைவியர்களாக அழைத்துக் கொண்டுவந்த மலேசியப் பெண்களால் கிளிட்டோரிஸ் நீக்கம் இலங்கை இஸ்லாமியர்களின் பண்பாட்டில் இடம்பிடித்திருக்கலாம் என்றும் ரேணுகாசேனநாயக்க தனது கட்டுரையில் பதிவு செய்கின்றார்.

'பெண்கள் முஸ்லிம் ஆராய்ச்சி முன்னணியின்' தலைவி ஜெஸீமா இஸ்மாயில், சமூகச் செயற்பாட்டாளர் டாக்டர் மரீனா றிபாய் போன்றோரினது கருத்துகளும் ரேணுகா சேனநாயக்கவின் கட்டுரையில் பதிவாகியுள்ளன. ஜெஸீமா இஸ்மாயில் இந்நடைமுறையினை *"Brutal Practice"* கொடூரமான நடைமுறை என்பதாகப் பதிவு செய்துள்ளார். இஸ்லாமிய மக்களின் பண்பாட்டோடு வேரூன்றிப் போயிருக்கும் இந்த அநீதிக்கு எதிராக, கிழக்குமாகாணத்தைச் சேர்ந்தவரும், தவிர்க்க முடியாத பெண் ஆளுமையுமானசமூகச்செயற்பாட்டாளர் ஜெஸீமா இஸ்மாயில் உயர் இடங்களில் பதிவு செய்ததோடு நின்றுவிட்டார். இந்த அநீதி நிறுத்துவதற்காக அவர் செயற்படவில்லை என்பதும் கவனிக்க வேண்டியிருக்கின்றது.

*1997* இல் என்பதாக ஞாபகம், பிறப்புறுப்புச் சிதைப்பு விவகாரத்தை உலகத்தின் வெளிச்சத்துக்கு கொண்டு வந்த முதல் பெண் வாரிஸ் டைரி. இவர் ஆப்பிரிக்கத் தேசத்தின் சோமாலியா நாட்டிலிருந்து பால்ய வயதுத் திருமணத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காகச் சொந்த நாட்டை விட்டுத் தப்பித்து வெளியேறியவர். மேற்குலகின் முன்னணி மாடல் அழகியாகத் தன்னைத் தடம்பதித்துக் கொண்டிருக்கும் வாரிஸ், உலகின் பிரபல ஃபேஷன் பத்திரிகையான 'மேரி க்ளேய்ர்' க்கு அளித்த நேர் காணலே பல்லாயிரம் வருடங்கள் பழமையான பிறப்புறுப்புச்சிதைப்பு விவகாரத்தை பொது அரங்கில் விவாதப் பொருளாக மாற்றியது. இவரது தன் வரலாற்று நூல் *Dessert Flower* உலகின் கவனிப்பைப் பெற்றுக் காட்சித் திரைக்கும் கொண்டு வரப்பட்டது. வாரிஸ், தன் வரலாற்று நூலில், தனது பிறப்பு உறுப்பு சிதைக்கப்பட்டதை விபரித்திருக்கிறார். பெண் உறுப்பின் உதடுகளில் அகேஷியா மரத்தின் முட்களை ஒவ்வொன்றாகச் செருகி துளையிடுகின்றாள் மருத்துவச்சி. பிறகு வெள்ளை நூல் கொண்டு உறுப்பைத் தைத்துவிடுகின்றாள். சிறுநீர் கழிக்கப் போதுமான துவாரத்தை வைத்துவிட்டு மீதிப் பிறப்புறுப்பு மூடப்படுகின்றது.

ஆப்பிரிக்க நாடுகளில் *93* விழுக்காடு பெண்களுக்கு இவ்வாறு பிறப்புறுப்புச் சிதைக்கப்படுகின்றது. இவர்கள் வாழ்நாள் முழுவதும் பெருந் துயரைச் சுமக்கவேண்டும். மாதவிடாய் காலங்களில் இவர்களது வலி பன்மடங்கு பெருகுகின்றது. கட்டுப்படுத்த முடியாத வலியில் அவர்கள்துடித்துஅழும்போது,

மாதவிடாயை நிறுத்த மருத்துவர்கள் கருத்தடை மாத்திரைகளைத் தருகின்றனர்.

மருத்துவிச்சியால் தையலிட்டு மூடப்பட்ட பிறப்பு உறுப்பு, திருமணத்தின் பின்பு, சரியாகச் சொல்வதென்றால் முதலிரவின் போது திறந்து விடப்படுகின்ற வழக்கம் ஆப்பிரிக்கா தேசத்தின் சில நாடுகளில் வழக்கத்திலிருந்து வருகின்றது. தையலிடப்பட்ட பெண்ணுறுப்பை மீண்டும் திறப்பது, தையலிடுவதைவிடவும் கொடிய அனுபவம். வாரிஸ் டைரி மருத்துவமனையில் சத்திரசிகிச்சை செய்தே தனது பெண்ணுறுப்பைத் திறந்து கொண்டதாக Dessert Flower என்ற தன் வரலாற்று நூலில் குறிப்பிடுகின்றார்.லண்டன் போன்ற மேலைத்தேய நாடொன்றுக்கு வாழவந்த அவருக்கு இதுசாத்தியமாகின்றது. ஆப்பிரிக்க நாட்டிலேயே வாழ்கின்ற பெண்களுக்கு பாதுகாப்பான மருத்துவ முறையில் தைக்கப்பட்ட பெண்ணுறுப்பைத் திறப்பது சாத்தியப்படக்கூடியதில்லை. ஏனில், தைக்கப்படும்போது அனுபவித்த அதே கொடிய அனுபவத்தையே திறக்கும்போதும் அவர்கள் திரும்பப் பெறுவார்கள். பெண்ணுறுப்பின் இறுக்கமான துளையை ஆண்கள் விரும்பும் சந்தர்ப்பங்களில், தையலிட்டு மூடப்பட்ட பகுதியைத் திறக்காமலே வாழ்நாள் நெடுகிலும் வாழும் பெருங் கொடுமையைப் பெண்கள் ஏற்றுக் கொள்கின்றனர். இந்தப் பெண்கள் பாலியல் இன்பத்தை அனுபவிக்க முடியாது, சிறு துளையில் ஆண் உறுப்பைச் செலுத்துகின்றபோது உண்டாகின்ற வலியில் கதறுவதும், பற்களைக் கடித்துச் சகித்துக்கொள்வதுமே இவர்கள் அறிந்த பாலுணர்வு இன்பம். இப்படியானவர்கள் பிள்ளைப் பேற்றின்போது வலி தாங்கமுடியாமல் தாயும், சிறு துவாரம் வழியாக உலகத்தைப் பார்க்கமுடியாது மூச்சுத் திணறி சிசுவும் இறந்துபோகும் கொடுமைகள் ஆப்பிரிக்க நாடுகளில் தினமும் நடைபெறுகின்ற அன்றாட நிகழ்ச்சிகள்.

பெண்ணுறுப்புச் சிதைப்பு, முழுமையாகவும் பகுதியாகவும் நடைமுறையிலிருந்து வருகின்றது. இதில் மூன்று வகையான முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

1. பெண் உறுப்பின் உள் முனையை (கந்து) செதுக்குதல் / நீக்குதல்
2. முனை மற்றும் புழையின் இரு பக்கத்திலும் உள்ள பெண் உறுப்பின்உ தடுகளை வெட்டி நீக்குதல்
3. பெண் உறுப்பின் உள் முனையை நீக்கிவிட்டு, இதழை அறுத்து புழையின் மேற்பகுதியை நூலால் தைத்துவிடுதல்.

இம்மூன்று முறைகளில் மூன்றாவதே வாரிஸூக்கு நிகழ்த்தப்பட்டிருந்ததை அவரது தன் வரலாற்று நூலிலிருந்து தெரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. ஆசிய நாடுகளில் இருப்பதானது, மேற்சொல்லப்பட்டிருக்கும் மூன்று முறைகளில்

முதலாவதாக இருக்கலாம். குறிப்பாக இலங்கையிலும் இந்தியாவிலும் முதலாவதே நடைமுறையில் இருக்கின்றது எனலாம்.



இந்தியாவில் மும்பை நகரத்தை மையமாகக் கொண்டு 2016 இல் எடுக்கப்பட்ட *India's Dark Secret : Female Genital Mutilation* என்ற ஆவணப்படம் இந்தியாவில் 'போரா' முஸ்லிம்களிடையே பிறப்புறுப்புச் சிதைப்பு புழக்கத்தில் இருந்து வருவதைப் பற்றிப் பேசுகின்றது. பிறப்புறுப்புச் சிதைப்புக்கு உள்ளான பெண்கள் குரல்களில் வந்திருக்கும் இந்தியாஸ் டார்க் ஸீக்ரெட் ஆவணப்படம் மிக முக்கியமான தொகுப்பு. இலங்கையைப் போன்று குழந்தை பிறந்த நாற்பதாவது நாளில் இல்லை, வளர்ந்து சிறுமியான பிறகே இச்சடங்கைச் செய்கிறார்கள். இந்த ஆவணப்படத்தில் தம் அனுபவத்தைப் பகிர்கின்ற பெண்கள் 8 – 14 வயதுச் சிறுமிகளாக இருந்தபோதே கத்னா செய்யப்பட்டுள்ளார்கள்.

ஐக்கிய நாடுகள் சபை பெண் உறுப்பு சிதைப்பை 2012, நவம்பர் 27இல் தடை செய்தது. இதனையடுத்து ஆப்பிரிக்க தேசத்தில் உள்ள நைஜீரியா நாட்டு அதிபர் எடுத்த வரலாற்று முக்கியத்துமிக்க தீர்மானம் அந்நாட்டுப் பெண்கள் சிறுமிகளுக்கு விடுதலையுணர்வைப் பெற்றுத் தந்துள்ளது. பெண்ணுறுப்புச் சிதைப்பு மிக மோசமான முறைகளில் நடைமுறையில் உள்ளவொரு தேசத்தில் இருந்து வரும் இந்த சுதந்திரக் காற்று பெரும் நிம்மதியைத் தருகின்றது.
ஆம்! நைஜீரியா நாட்டில் பெண் உறுப்பு சிதைப்புச் சடங்கிற்குத் தடை 2015 மே 5 முதல் சட்ட ரீதியாக நடைமுறைக்கு வந்தது. நைஜீரியாவின் அதிபர் குட்லக்ஜோனாத்தன், கடந்த வருடம் மார்ச் மாதம் நடைபெற்று முடிந்த அதிபர் தேர்தலில் முஹம்மது புஹாரியினால் தோற்கடிப்புச் செய்யப்பட்டார். இந்தியா, இலங்கை போன்ற ஆசிய நாடுகளில் நடப்பதுபோன்று முன்னாள் அதிபர் கொண்டு வந்திருந்த அமலுக்கு வராத சட்ட மசோதாவை புதிய அதிபர் வெட்டுக் குத்து விளையாட்டுகளால் தூக்கிப்போடவில்லை. இது பெண்களின் விவகாரம்தானே என்று புறக்கணிக்கவில்லை. புதிய அதிபர் முஹம்மது புஹாரி பெண் உறுப்புச் சிதைப்பைத் தடை செய்யும் சட்ட

மசோதாவை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துச் செயற்படுத்தியுமுள்ளார்.

சட்டங்களை இயற்றுவதும் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றுவதும் சிரமமான காரியங்கள் இல்லை. சிரமம், இந்தச் சட்டத்தை மதக் களைவு செய்து மக்கள் மயப்படுத்தி நடைமுறைக்குக் கொண்டுவருவதே. நைஜீரியா அரசாங்கமும் அங்கு செயற்படும் மகளிர் செயற்பாட்டாளர்களும், நாட்டின் முற்போக்கு அமைப்புகள், நிறுவனங்களும் பெண்ணுறுப்புச் சிதைப்பை முற்றிலும் இல்லாது ஒழித்து உலகை ஆச்சரியத்தில் ஆழ்த்தக்கூடிய நடவடிக்கைகளைச் செயற்படுத்திக் கொண்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் மூலம் தெரிந்து கொள்ள முடிகின்றது. மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான கேம்பியா நாட்டின் அதிபர் யஹ்யாஜம்மீஹ் பெண் உறுப்புச் சிதைப்பு நடைமுறையை முற்றிலும் தடை செய்வதற்கான சட்டத்தை விரைவில் நிறைவேற்றப் போவதாகஅறிவித்துள்ளார். இப்படி அறிவிப்புச் செய்வதனால் தேர்தலில்தோற்றுப்போவதற்கான சாத்தியப்பாடுகள் இருப்பது குறித்து எச்சரிக்கப்பட்டும் பொருட்படுத்தாமல் இந்த அறிவிப்பைச் செய்துள்ளார் அதிபர் யஹ்யா.

பெண்களுக்கு எதிரான அனைத்துப் பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான மனித உரிமைச் சாசனங்களில் கைச்சாத்திட்டுள்ள நாடான இலங்கையில் இதுவரையில், பிறப்புறுப்புச் சிதைப்பு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள், செயற்பாடுகள்எதுவும்இடம்பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. இரு காரணங்கள்: ஒன்று, ஆப்பிரிக்கா நாடுகளில்போன்று தீவிர செயற்பாட்டுத் தளத்திற்குள் இச்சடங்கு இலங்கையில் இல்லை. இரண்டு, இது சிறுபான்மைச் சமூகமாகிய அதாவது 7 விழுக்காடுகளுக்கும் குறைவான இஸ்லாமியர்கள் மத்தியிலேயே புழக்கத்தில் இருக்கின்றது. சிங்களப் பேரினவாத அரசுக்கு இஸ்லாமியப் பெண்களின் கிளிட்டோரிஸ் சிதைக்கப்படுவதைக் குறித்து என்ன அக்கறை?

ஏனில், இதைக் குறித்து அக்கறைப்படவேண்டியவர்கள் யார்? இலங்கை இஸ்லாமியத் தலைவர்கள், மதத் தலைவர்கள், முற்போக்காளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், படைப்பாளிகள்.

இலங்கையில் சிறுமிகளைத் திருமணம் செய்வதை நியாயப்படுத்திக்கொண்டு, விவாக விவாகரத்துச் சட்டத்தை மாற்றுவதற்கு இடையூறாக இருக்கின்ற ஆண்களின் கைகளிலேயே இன்று இஸ்லாம் இருந்து கொண்டிருக்கின்றது. இவர்களோடு போராடுவது கல்லில் நார் உரிப்பதுபோன்றது என்பதற்காகவே பல முற்போக்கு இஸ்லாமியர்கள் செவிடராயும் ஊமையராயும் காலந்தள்ளும்

ஓர் இருண்ட காலமே இன்று இலங்கையில் நிலவுவது. இஸ்லாம் மதம் என்ற நிலையைக் கடந்து, இஸ்லாம் இயக்கம் என்ற நிலை வந்துவிட்டது. இந்த நிலையில் சமூக நலன், எதிர்காலக் கனவு, விடுதலை உணர்வு, சுதந்திரம், சுயம் ஆகியவற்றுக்காக எதிர்வினையாற்றுவது உயிரையே விலையாகப் பெறக்கூடிய ஆபத்துக்களுக்கான சாத்தியங்கள் இலங்கைக்குள் வந்துவிட்டன.

இத்தகைய சூழலில், இலங்கை இஸ்லாமியப் பெண்களின் கிளிட்டோரிஸை யார்காப்பாற்றுவது? இலங்கை இஸ்லாமியரிடையே இப்படியான பண்பாட்டுச் சடங்கு புழக்கத்தில் இருப்பதே 21ஆம் நூற்றாண்டில்தான் வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது.

பாலியலில் ஆண்களின் அதிகாரத்தை நிறுவுவதற்காக மாத்திரமே இச்சடங்கு செய்யப்பட்டுக் கொண்டிருந்தாலும்க கூட பெண்கள்தான் இச்சடங்கை முற்றுமுழுதாகக் கையாழுகின்றார்கள்.கண்மூடித்தனமாக காலங்காலமாகத் தொடர்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் இதுவோர் மதக் கடமை.‘கன்னித்தன்மையைப்’(?) பேணுவதற்காகத் தனக்குச் செய்யப்பட்டது, தனது மகளுக்கும் செய்யப்படவேண்டும் என்றே ஒவ்வொரு தாயும் இந்தச் சடங்கைச் செய்கிறார். கிளிட்டோரிஸ் நீக்கும் இந்தச் சடங்கு, ஆணாதிக்க சமூக அடிமைக் கூறுகளில் ஒன்று என்பதை இந்தப் பெண்களுக்கு எப்படி விளங்கிக் கொள்ளச் செய்வது?

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்குப் பிறகும், பல தொழுகைகளுக்குப் பிறகும் மிம்பரில் முல்லாக்கள் முழங்கும் வார்த்தைகளை மந்திரமாகப் பாவிக்கும் இந்தப் பெண்களிடம் சமூகத்திடம் இதை எடுத்துச் செல்லத் துணிந்த ஒரு மௌலவியைத்தானும் கண்டுகொள்ள முடியுமா? இங்கு பெண் மௌலவிகளின் சமூகப் பங்குபற்றுகை பற்றிய மிகப்பெரிய கேள்வி துருத்திக் கொண்டு நிற்கின்றது. ஆண்கள் வகுத்திருக்கும் கொள்கைகளின் பிரதி விம்பங்களாக நிற்கும் பெண் மௌலவிகளின் மீது துயரம்படிந்த மௌனம் கவிகின்றது. பிறந்த குழந்தையின் முடியை மழித்துக் கொள்வது போலத்தான் பெண் உறுப்பின் கிளிட்டோரிஸை நீக்குவதும் என்று கூறிவிடாதீர்கள், பெண்களே! நீங்கள் உங்களைக் காப்பாற்றிக் கொள்ள முற்படாதவரை , உங்களை வேறெவரும் காப்பாற்ற மாட்டார்கள். நம் பெண்குழந்தைகளின் கிளிட்டோரிஸை இனிச் சிதைக்க மாட்டோம் என்று சபதமெடுங்கள்! இதை நம்மால் தான் இல்லாதொழிக்க முடியும்.




எங்கோ சோமாலியாவிலும் சில ஆபிரிக்கப் பழங்குடிகளிடமும் மட்டுமே இருப்பதாகப் பொதுவாக அறியப்படும் 'கிளிட்டோரிஸ் துண்டிப்பு' இலங்கையிலும் முஸ்லீம் சமூகத்திடையே இரகசியமாக நீண்டகாலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

பெண்ணுறுப்பில் பாலியல் உணர்ச்சி நரம்புகளின் குவியமான 'கிளிட்டோரிஸ்' எனும் பகுதியை குழந்தைகளுக்குத் துண்டித்துவிடும் அல்லது சிதைத்துவிடும் இச் சடங்கு 'கத்னா' எனும் பெயரில் அழைக்கப்படுகிறது. இச் சடங்கில் கிளிட்டோரிஸை வெட்டித் துண்டிக்கும் அல்லது சிதைத்துவிடும் பெண்மணி 'ஒஸ்தா மாமி' என அழைக்கப்படுகிறார். இந்தக் கிளிட்டோரிஸ் துண்டிப்பு குறித்து ரேணுகா சேனநாயக்கா 1996-ல் எழுதிய *SRI LANKA-CULTURE: Mothers Watch as Daughters are Circumcised* என்ற கட்டுரையில் தொண்டு நிறுவனமொன்று இலங்கை முஸ்லீம்களிடையே கிளிட்டோரிஸ் துண்டிப்புக் குறித்துக் கருத்துக்கேட்டபோது கருத்துத் தெரிவித்தவர்களில் 90 விழுக்காடானவர்கள் இந்தக் 'கத்னா' வழக்கத்திற்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்தனர் எனப் பதிவு செய்கிறார்.

கடந்த வருடம் இதுகுறித்து 'த ஐலண்ட்' பத்திரிகையில் *The Hidden Horrors of Female Genital Mutilation* என்ற தலைப்பில் கட்டுரை எழுதிய நபீலா சபீர் இலங்கைச் சட்டங்களின்படி இச் சடங்கு தண்டனைக்குரிய குற்றமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சடங்கை அய்.நா. பெண்களிற்கு எதிரான வன்முறை என வரையறுத்திருக்கிறது. இக்கொடிய சடங்கு இன்று அய்ந்து கண்டங்களிலும் எழுபத்தைந்துக்கு மேற்பட்ட நாடுகளில் வழக்கத்திலுள்ளது. *Prevalence of fe-*

*male genital mutilation by country* என்ற 'விக்கிபீடியா' கட்டுரை இலங்கையிலும் இந்தியாவிலும் இந்தச் சடங்கு வழக்கிலுள்ளதைச் சான்றுகளுடன் தெரிவிக்கிறது.

இலங்கையிலுள்ள தமிழ் வாசிப்போர் மத்தியில் இந்தக் கொடிய சடங்கு குறித்து ஒன்றிரண்டு பதிவுகளுள்ளன. அனார் இச்சடங்கு குறித்து 'ப்லேட்' (*Blade*) என்ற சிறுகதையை எழுதியுள்ளார். சமூக வலைத்தளத்தில் லபீஸ் ஸாகீட் 'சில ஆண்டுகளுக்கு முன்பு உஸ்தாத் மன்சூர் தன்னுடைய 'நகர்வு' சஞ்சிகையில் இந்த வழமைக்கு எதிராக எழுதவும் அதற்கு சூபி செல்வாக்கு கொண்ட மதரஸாக்கள் கடுமையாக மறுப்பு வெளியிட்டமைக்கு நான் சாட்சி. சுருக்கமாக சொல்வது எனில் மரபு ரீதியான முஸ்லிம்களிடத்தில் இந்த வழமை இன்னும் செல்வாக்கு இழந்திடவில்லை என்பதே உண்மை' எனப் பதிவு செய்துள்ளார்.

*Naseeha Mohaideen* தன்னுடைய முகநூல் பதிவொன்றில் «கிளிட்டோரிசை நீக்காமல் அதில் சிறுபகுதியை வெட்டுதல்/ கிளிட்டோரிஸை வெட்டி அதை முற்றாக நீக்குதல் போன்ற வழக்கங்கள் இலங்கையில் உள்ளதாகத் தெரிகிறது...» எனக் குறிப்பிட்டு இந்தச் சடங்கிற்கு எதிரான பதிவொன்றை வெளியிட்டிருந்தார்.

கல்முனையைச் சேர்ந்த மௌலவி *S.L.* அப்துர்ரஹ்மான் 'பெண்களுக்கு கத்னா செய்வது என்பது இஸ்லாமிய ஷரீத்தில் உறுதியாக கூறப்பட்ட விசயமாகும். இதில் சந்தேகப்பட வேண்டியத் தேவையில்லை. முஸ்லிம்கள் கத்னா செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறும் பல ஹதீதுகள் வந்துள்ளன.' என 'பெண்களுக்கு கத்னா செய்ய வேண்டுமா?' என்ற கட்டுரையில் (*mailofislam.com*) இரக்கமற்றுக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இச்சடங்கு ஓர் இரகசியமான புதிர்த் தன்மையுடனேயே இன்னுமிருக்கிறது. இப்பேசாப் பொருளைப் பேசத் துணிந்தோருக்காக ஒரு தொகை முஸ்லீம் பெண் மழலைகள் காத்துக்கிடக்கிறார்கள். அந்த மாசற்ற மழலைகளை ஒஸ்தா மாமிகளின் கைகளிற்கு ஒப்புக்கொடாமல் தப்புவிப்பதைத் தவிர வேறென்ன முக்கிய கடமை நமக்கிருக்கப்போகிறது?

ஆங்கிலப் பத்திரிகைகளில் கட்டுரைகளை எழுதுபவரும், *derailedwords.com* என்ற வலைப்பதிவில் பதிவிடுபவரும், தற்போது பாரிஸில் தரித்து நிற்பவருமான தோழர். முகமட் ஃபர்ஹான் அண்மையில் இக்கொடிய வழக்கத்தைக் கண்டனம் செய்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருந்தார். அவருடன் 'ஆக்காட்டி'க்காக ஒரு தொடக்க உரையாடல்

-ஷோபாசக்தி 04-04-2017




**இந்தக் கிளிட்டோரிஸ் துண்டிப்புச் சடங்கு இலங்கையில் எப்படி உருவாகி நீடித்து நிற்கிறது? இந்தச் சடங்கு இஸ்லாமிய வழிமுறையா? அல்லது பழங்குடிப் பண்பாட்டு எச்சமா?**

***ஃபர்ஹான் :*** இச்சடங்கு அதிபழைமைவாதமான சூஃபி மரபிலிருந்து உருவானதாகவே கருதுகிறேன். வஹாபிகள் மட்டுமே இந்தச் சடங்கை இலங்கையில் சமகாலத்தில் எதிர்த்துக்கொண்டிருக்கும் ஒரே தரப்பாகும். அவர்கள், ஹதீதுகளில் இந்தக் கிளிட்டோரிஸ் துண்டிப்புச் சடங்கு குறித்துக் குறிப்பிடப்படவில்லை, அதனால் இச்சடங்கு இஸ்லாத்துக்கு எதிரானது என்கிறார்கள். மற்றைய வலுவான முஸ்லீம் தரப்புகள் -குறிப்பாகத் தம்மை முற்போக்கெனப் பிரகடனப்படுத்திக்கொள்ளும்- ஜமாத் ஏ இஸ்லாமி, முஸ்லீம் பிரதர் கூட் *(MFCD)*போன்ற அமைப்புகள் இந்தக் காட்டுமிராண்டித்தனமான சடங்கு குறித்துப் பேசாமலேயே இருக்கிறார்கள். முஸ்லீம் சமூகத்திலுள்ள அறிவுஜீவிகள் மத்தியிலும் கல்விச் சமூகத்தின் மத்தியிலும் எழுத்தாளர்கள் மத்தியிலும் இச்சடங்கு குறித்து நீண்ட கள்ள மௌனமே இதுவரை சாதிக்கப்படுகிறது. இலங்கை முஸ்லீம்களால் நடத்தப்பட்ட- நடத்தப்படும் சீரிய இலக்கியச் சிறுபத்திரிகைகள் கூட இந்த விடயத்தில் இதுவரை மௌனம் காத்துள்ளன. வானத்திற்கும் பூமிக்கும் நடுவிலுள்ள எல்லாவற்றைப் பற்றியும் தட்டச்சும் அவர்களது விசைப் பலகைகள் கத்னாவுக்குப் பலியாகும் சிறுமிகள் பற்றி எழுத மட்டும் தயங்கிக்கிடக்கின்றன.

இந்தச் சடங்கு இலங்கை முஸ்லீம் சமூகத்தினரிடையே தற்போது எவ்வளவிற்கு

*நிலைகொண்டிருக்கிறது? ரேணுகா சேனநாயக்க 90 விழுக்காடு முஸ்லீம்கள் இலங்கையில் இச்சடங்கை ஆதரிப்பதாகக் கூறுகிறாரே?*
ரேணுகா சேனநாயக்க குறிப்பிடுவது மிகச் சரியெனவே நான் எண்ணுகின்றேன். இந்தச் சடங்கு என்னுடைய குடும்ப உறவுகளிற்கே நடந்திருக்கிறது. இந்தக் கிளிட்டோரிஸ் துண்டிப்புச் சடங்கு குறித்து முஸ்லீம் பெண் ஆளுமைகளுடன் பேசியிருக்கிறேன். அவர்களும் இச்சடங்கிற்கு உள்ளாகியிருப்பதாகச் சொன்னார்கள். எனினும் இது குறித்து ஓர்மமான எதிர்ப்புக் குரலோ உரையாடலோ இன்னும் கிளம்பாமலிருப்பது மிகப் பெரிய துக்கம்.

***எழுத்தாளர் றியாஸ் குரானா கிளிட்டோரிஸ் துண்டிப்பு குறித்துத் தான் அறிந்திருக்கவில்லை எனவும் ஆனால் குழந்தைகளின் பெண்ணுறுப்பில் சிறுதுளி இரத்தம் எடுப்பதுபோல ஒரு சடங்கு நிலவி வருகிறது எனவும் எழுதியிருக்கிறாரே?***

***ஃபர்ஹான் :*** றியாஸ் குரானா சொல்வதுபோலவே இச் சடங்கு சிறுதுளி இரத்தம் எடுப்பதுதான் என்று வைத்துக்கொண்டாலும் அதுவும் வன்கொடுமைதான். ஆனால் ,இலங்கையில் நடப்பது கிளிட்டோரிஸ் துண்டிப்பு அல்லது சிதைப்புத்தான். அதைத்தான் கத்னா என்கிறார்கள். நான் என் குடும்பத்திற்குள்ளும் வேறுபலரிடமும் பேசி உறுதிப்படுத்திக்கொண்டுதான் இதைச் சொல்கிறேன். றியாஸ் குரானா இது குறித்து அறியாதவர்போன்று நன்றாக நடிக்கிறார். அவருக்குள் உறைந்திருக்கும் பழைமைவாத முஸ்லீம் இந்தக் கொடுமையைப் பூசிமெழுகிவிட முனைகிறார். ஒட்டுமொத்த முஸ்லீம் சமூகமே இது குறித்து உரையாட விரும்பாதவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

***ஆனால் இச்சடங்கு இப்போது அருகி வருகிறது என்று சிலர் சொல்கின்றார்களே?***

***ஃபர்ஹான் :*** நீங்கள் யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களிடம் இப்போதும் சாதிமுறை இருக்கிறதா எனக் கேட்டுப்பாருங்கள். இப்போது அது அருகிவிட்டது என்பார்கள். ஆனால் உண்மையிலேயே சாதிமுறை பலமாக அங்கிருக்கிறது.

இந்தக் கத்னா சடங்கு இப்போது அருகிவிட்டதென இவர்கள் எந்த ஆய்வின், தரவுகளின் அடிப்படையில் சொல்கிறார்கள்? இவர்கள் சொல்வதற்குச் சான்றுகள் என்ன? இப்போதும் வழக்கத்திலிருக்கும் ஒரு மிகப் பெரிய சமூகக் கொடுமையை இப்படியான சப்பைக்கட்டுகளைக் கட்டி இவர்கள் மூடி மறைப்பது வருத்தத்திற்குரியது. மதத்தின் பெயரால், பண்பாட்டின் பெயரால் பெண்கள் மீது நிகழ்த்தப்படும் கொடுமைகளை மறைப்பதையும் சகித்துக்கொள்வதையும் அனுமதிக்கவே முடியாது.

**இந்தச் சடங்கு குறித்து பரவலான எதிர்ப்பு இதுவரை தோன்றாததற்கான காரணமென்ன?**

***ஃபர்ஹான் :*** ஒன்றை யோசித்துப் பாருங்கள்... அனாரும் நஸீஹாவும் உஸ்தாத் மன்சூரும் இது குறித்துப் பேசியது கற்பனைத்தளத்திலிருந்தா? ஒரு உண்மையை அவர்கள் பேசியிருக்கிறார்கள். ஆனால் இந்தக் குரல்களை என் சமூகம் நிராகரித்திருக்கிறது. கடுமையாக எதிர்க்கவும் செய்கிறது. மதவாதத்திற்குள் விழுந்து கிடப்பவர்கள் இந்தச் சடங்கை இயல்பானதொன்றாக ஏற்கும் மனநிலையிலிருப்பதே இதுவரை எதிர்ப்புத் தோன்றாததற்கான காரணம். அங்கொன்றும் இங்கொன்றுமாக எதிர்ப்புக் குரல்கள் தோன்றும்போது கூட, அப்படியெல்லாம் ஒன்றுமில்லை, நாங்கள் கேள்விப்பட்டதேயில்லை எனப் பொய்ச்சாட்சியம் உரைப்பது மதவாத நோய்க் கூறாகும்.

**இந்தச் சடங்கைத் தடுத்து நிறுத்துவதற்கான எதிர்ப்புச் செயற்பாடுகளை நாம் எங்கிருந்து தொடங்கவேண்டும் எனக் கருதுகிறீர்கள்?**

***ஃபர்ஹான் :*** கண்டிப்பாக முஸ்லீம்கள் மத்தியிலிருந்துதான் எதிர்ப்புக் குரல்களைத் தொடங்க வேண்டும். முஸ்லீம் சிந்தனையாளர்களாலும் எழுத்தாளர்களாலும் இது குறித்த ஒரு விழிப்புணர்வைச் சிறிய அளவிலாவது உண்டாக்க முடியும்.
இலங்கை முஸ்லீம்களிடையே இடதுசாரி இயக்கங்களோ தீவிர பெண்ணிய இயக்கங்களோ கிடையாது. எனவே மக்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ள இஸ்லாமிய இயக்கங்கள் தான் இந்தப் பிரச்சினையைக் கையிலெடுத்து இந்தக் கொடூரமான வழக்கத்தை ஒழித்துக்கட்ட வேண்டும். அவர்களால் மட்டுமே முழுவதுமான மாற்றம் சாத்தியம்.

**அப்படியானால் இந்தச் சடங்கைத் தீவிரமாக எதிர்க்கும் வஹாபிகளை நாம் இந்த விடயத்தில் ஆதரிக்கத்தானே வேண்டும்?**

***ஃபர்ஹான் :*** முதலில் ஒன்றைப் புரிந்துகொள்ளுங்கள். வஹாபிகள் சிறுமிகள், பெண்கள் மீதுள்ள அக்கறையால் இச் சடங்கை எதிர்க்கவில்லை. 'பித்ஹத்' என்பதாலேயே எதிர்க்கிறார்கள். அதாவது இறைத்தூதர் செய்யாத, மொழியாத விடயமாக இந்தச் சடங்கை அவர்கள் பார்க்கிறார்கள். அதேவேளையில் இஸ்லாமியப் பெண்கள்மீது மட்டுல்லாமல் ஒட்டுமொத்த இஸ்லாமியச் சமூகத்தின் மீதும் வஹாபிகள் ஏராளமான அடக்குமுறைகளைத் திணித்துவருகிறார்கள் என்பதை நாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும். 70-களில் இலங்கையில் காலூன்றிய வஹாபிஸம் இப்போது வலுவான ஒரு தரப்பாகி முஸ்லீம் சமூகத்தை மத அடிப்படைவாதத்தை நோக்கித் தள்ளிச்

சீரழிக்கிறது. பிற சமூகங்களிற்கும் முஸ்லீம் சமூகத்திற்குமான நல்லிணக்க உரையாடல்களிற்கான சாளரங்களை வஹாபிகளின் அடிப்படைவாதம் மூடியும்விடுகிறது. ஆக கிளிட்டோரிஸ் துண்டிப்புக்கு எதிரான வஹாபிகளின் எதிர்ப்பு அவர்களிற்கும் சூஃபி மரபுக்கும் இடையேயான போரின் ஒரு அம்சமே தவிர பெண்களின் நலனுடன் தொடர்புடையதல்ல.

**இந்தக் கிளிட்டோரிஸ் துண்டிப்புச் சடங்கு முஸ்லீம்களிடையேயுள்ள பண்பாட்டுப் பிரச்சினை. இது குறித்து முஸ்லீம்கள் அல்லாத மேற்குலகும் பிறரும் பேசுவது ஒருவகையான மூக்கு நுழைப்பு,ஆதிக்கச் செயற்பாடு எனக் கருதுகிறீர்களா?**

***ஃபர்ஹான் :*** மேற்குலகம் உட்பட எல்லாத் தரப்புகளும் தங்களது சொந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் பிரச்சினைகளை அணுகக்கூடியவைதான். அதேவேளையில் நம்மிடையேயிருக்கும் கிளிட்டோரிஸ் துண்டிப்பு அல்லது சிதைப்பு போன்ற விடயங்கள் குறித்து அவர்கள் பேசும்போதும் தலையீடு செய்யும் போதும் நாம் அந்தக் குரல்களை முற்றிலுமாக மறுத்துவிட முடியுமா என்ன! இலங்கையில் நடைபெறும் இந்தக் கத்னா சடங்கை இனியும் அனுமதிப்பது முஸ்லீம் சமூகத்திற்கு பெருத்த சுய அவமானமாகும். கத்னாவை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கான பண்பாட்டுத்தளத்திலான நடவடிக்கைகளை மட்டுமல்லாமல் சட்ட நடவடிக்கைகளையும் நாம் ஒருகணமும் தாமதியாது தொடங்கியாக வேண்டும்.

மதத்தின் பெயரால் கிளிட்டோரிஸ் துண்டிப்புக்கு உள்ளான ‘பாலைவனப் பூ’ வாரிஸ் டைரி தனது தன்வரலாற்று நூலில் சொல்வதைக் கவனியுங்கள்:
விசுவாசத்தை காட்டுமிராண்டித்தனமான சடங்குகளின் வழியே பெறுவதைவிட, நம்பிக்கையின் மூலம், அன்பின் மூலம் பெறமுடியும் என்பதை அறிய வேண்டும். துன்பங்களைச் சுமந்திருக்கும் பழைய முறைகளை அகற்றுவதற்கான நேரம் வந்துவிட்டது!





# ப்லேட் (Blade)

• அனார்

வாழை மரத்தெச்சுத்தி கால் இறுகிக் கயித்துடன் அவதிப்பட்டுக் கிடந்தது சாவல்கோழி. நானும் தம்பியும் சோறு கறி ஆக்கி விளையாடுகிற இடத்தில கோழியக் கட்டிப்போட்டிருந்தாங்க.

உம்மா பிளிஞ்சதேங்காப்பூவ கோழிக்கு ஒரு தட்டில கொட்டியிருந்தாங்க. வாளில தண்ணி எடுத்திட்டு பலாமரத்தடிக்குப் போற வாப்பாட கையில கத்திரிக்கி. முண்டுக்கல்லில கத்தி தீட்ற சத்தம் கேட்குது. எனைக்கிண்டா காது கூசுது. ரெண்டு காதயும் பொத்திக்கிட்டென்.

என்ட அல்லாவே ! நான் தான் இண்டைக்கிம் கோழியை அறுக்கிறதுக்கு பிடிக்கணும். தம்பியைப்போல எனக்கு கொஞ்சமும் அது விருப்பமில்ல. ஏனிண்டா கோழியைச் சமைச்சிச் சாப்பிடும்போது அறுக்கிறதுதான் ஞாபகத்தில வரும். என்ன செய்ற இப்பெ அறுக்கக்குள்ள கண்ண மூடிடனும். வாப்பா கூப்பிட்டார். நானும் தம்பியும் கோழிர கயித்த அவிழ்த்தோம். நான் சிறகில பிடிச்சி அமுக்கினன். தம்பி கால்களைப் பிடிச்சிருந்தான். அடித்தொண்டையிலரிந்து சாவல்கோழி வழமைக்கு மாறாக் கத்தியது. பாவம் நல்ல இளந்தாரிப் பாணிச் சாவல் என்று வாப்பாவிடம் தம்பி சொன்னான்.

வாப்பா கோழிய மல்லாக்கப் பிடிச்சி அவர்ர பக்கம் இருந்த அதன் சொண்டப் பிரித்துதண்ணீர்பருக்கினார். தொண்டையிலிருந்தசதையசற்றுக்கிள்ளிஉயர்த்திப் பிடித்தவர் கால்கள இறுக்கமாக என்னப் பிடித்துக் கொள்ளச் சொன்னார். இப்ப கோழியின் கழுத்தில் கூரான கத்திய வைத்து தக்பீர் சொல்லியபடி விடாமல் அறுத்தார். ரத்தம் என் சட்டையில தெறித்தது. மரத்தடியில கையை விடாமல் கோழிய கீழ வச்சதும் இறக்கைய சட சடவென அடித்து சாவல் துடித்திச்சி.

அறுபட்ட கழுத்தோட பாய்ந்து எம்பி, பக்கத்து வேலியெல்லாம் மோதி ரத்தம் கொட்டி ஈரமண்ணுக்குள்ள கிடந்ததெ பார்ப்பதுக்கு கவலையா இருந்திச்சி. வப்பாவே கோழிய உரிச்சி கழுவி உம்மாட்ட குடுப்பார். உம்மாவின் கோழிக்கறி ருசியும் மஞ்சச்சோறும் தின்னுவதை நினச்சாலே நாக்கு ஊறுது. நாங்க ரண்டுபேரும் எங்கட விளையாடும் இடத்துக்கு திரும்ப வந்து விளையாடத் தொடங்கினம்.

தம்பி கேட்டான் ''ராத்தா கடை வைப்போமா?'' சோறு கறி ஆக்குவமா? ''நாமளும் இண்டகி சோறாக்கி விளையாடுவம்'' என்றேன். கறி ஆக்குவதற்காக கொச்சிக்காய்த்தூள் இடிச்சி தரச்சொன்னேன். அவன் சிரத்தையுடன் பெரிய செங்கல்லின் நடுவில் சிறிய செங்கல் துண்டொன்றை உரஞ்சி உரஞ்சி தூள் தயார் பண்ணிக்கெணடிருந்தான்.

அந்நேரம்தான் ''வெள்ளத்தம்பியர்ர சல்மாட வீடு இதானா?'' என்று சத்தமா கேட்டபடி பெத்தா ஒருவ வந்தா. இதுதான் என்றேன். ஆ.. நான் இரண்டு மூணு ஊடுலா தேடிப்போட்டு வாறன் என்று சிரித்தா. பெத்தாட முகம் சதையெல்லாம் சுருங்கி கோடு கோடாய் தொங்கி கிடந்திச்சி. வெத்தல போட்டு சிவந்த நாக்கு வெளிய தெரியும்படி உம்மாவ திருப்பி கூப்பிட்டா.... ''உம்மா புதுச் தங்கச்சிக்கு பால் குடுக்காங்க சாப்பறைக்குள்ள போய்ப் பாருங்க'' என்று பெத்தாவ ஊட்டுக்குள்ள அனுப்பிட்டு நான் மற்ற வேலைகள செய்யத் தொடங்கினன்.

வேலி முருங்கை மரத்தில இலை கொஞ்சம் ஆஞ்சேன், விழுந்துகிடந்த விழிமாங்காபழங்களையும் ஒரு சிரட்டைக்குள் பொறுக்கி எடுத்தேன். வேறொரு சிரட்டைக்குள் கறியக் கூட்டினேன். மண்ணடுப்பில் வச்சி கம்புக்குச்சியால் கிளறிவிட்டு... கிளறிவிட்டு... கறி ஆக்கினேன். நேத்தய பீட்ரூட் கிழங்கிட மிச்சம் மீதிய தண்ணீருக்குள்விட்டு நல்லாக் கழுவி சிவந்த நிறமான நீரை சர்பத்துக்களாக போத்தல் மூடிகளில் ஊத்தினேன். வெள்ளக் குருத்து மணலில் கொஞ்சமா அள்ளி சீனியாம் என்று அதனுள் போட்டு கலந்து வைத்தேன். கறி கொதிச்சிட்டு இருந்திச்சி. தம்பிய கொச்சிக்காய்த்தூள் தரும்படி சொன்னன். அவன் ஒரு பேப்பர்த்துண்டில செங்கல்த்தூளை எடுத்து வந்தான். அத வாங்கி கொதிக்கும் கறிக்குள்ளே கொட்டி கொஞ்சம் தண்ணீரும் ஊத்தினேன். முகத்த சுருக்கிக் கொண்டு ''இப்ப கறி உறைக்கப்போகுது ராத்தா... கூடயா தூளைப் போட்டுட்டா'' என்றான்.

''நீ சும்மாகிடவன் நான் சோக்காத்தான் ஆக்கிறன். சரி... சோறு கறியெல்லம் ஆக்கி முடிஞ்சிட்டு.. இனிச் சாப்பிடலாம் வா... வா...'' என்றேன். அவன் சந்தோசமாக சிறிய வாழை இலைத்துண்டுகளை, வாசல்குருத்து மணல் மேல் வடிவா விரிச்சிப்போட்டான். நான் கோபித்துக் கொண்டால் விளையாட்டு

இடையில குலைஞ்சு போயிடும் என்டு நினைச்சு தம்பி என்னுடன் இரக்கமாவும் அவதானமாவும் இருந்தான். ரெண்டுபேரும் மண்ணிலேயே இரிந்து சாப்பிட ஆரம்பித்தோம். அவன் களிசனில் பட்டன் இல்லாததால் ஓட்டைக்குள்ளால "குஞ்சு" எட்டிப்பார்த்தது. எனக்கு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு தம்பிக்கு சாப்பாடு போட்டன். அவன் விரல்களால் மணலயும் செங்கல்தூள்போட்ட புளிமாங்காய்க் கறியையும் பிசைந்து சும்மா சும்மா வாய்க்கருகே கொண்டு போவதும் பின்பு கீழே வைப்பதும் ஸ்... ஸ்... என்று வாயை உறிஞ்சி சாப்பிடுவதுமாக இருந்தான்.

"உரமா ச்சாக்கொட்டிறியே" "ரசமா இருக்கா" என்றேன். ம்... ம்... நல்ல ரசம்... உம்மாட கறிபோலயே இருக்கு ராத்தா என்றான். சாடயா உப்புத்தான் கொஞ்சம் காணா லா? என்றுட்டு என்னப் பார்த்தான். அது பரவால்ல, எனக்கு கணக்காத்தான் இருக்கு. கெதியா சர்பத்த குடிச்சிட்டு எடு. "வாப்பா வாறத்துக்கிடையில தண்ணி வாக்கணும் நாம" எனச் சொல்லிட்டு சர்பத்தை குடிப்பதுபோல பாவனை செய்து வாய்க்கருகில் கொண்டு வந்தேன். ஒரு வித அவிந்த நாத்த வாசமே வந்திச்சி. அத தம்பிக்கு காட்டிக் கொள்ளாமல் சாட்டுக்கு குடிப்பதுபோல நடிச்சன். அவனும் குடிக்கும் வரை காத்திருந்தேன். தம்பியின் முகம் சர்பத்தை எடுத்ததும் "செப்பமில்ல... சீய்" என்பதுபோல கோணினாலும் ஒன்றுமே சொல்லவில்லை அவன்.

'எஹாய்'. என்று இழுத்து ஒரு பென்னாம்பெரிய ஏவுறையை சத்தமாகவிட்டான். அது வாப்பா சாப்பிட்ட பிறகு விடுற சத்தம்போலயே இருந்திச்சி. வயிறு நிரம்பிட்டு போதும் என்று எழுந்துவிட்டான். வெயில் முகத்தைச் சுடத் தொடங்கியதும் இருவரும் விளையாட்டுச் சாமாங்களை ஒழுங்குபடுத்தத் தொடங்கினோம். தம்பியிடம் நீ கிணற்றடிக்கு தண்ணி வாக்கப் போ. நானும் தண்ணி வாக்க வாறன் என்றுட்டு வீட்டுக்குள்ள ஓடினேன். உம்மாவும் அந்தப் பெத்தாவும் முக்காட்டுக்குள்ளால் "குசு... குசு..." என்று பேசிக் கொண்டிருந்தார்கள். உம்மா எல்லாத்துக்கும் தலையாட்டி கொண்டிருந்தா. நான் தொட்டிலில் உறங்கிய தங்கச்சிய தொட்டுப் பார்த்தன். அவள் குட்டி ரோசப்பூப்போல நித்திரையில் இருந்தாள். ரோஸ் நிறமான சின்ன முகமும் எலிக்குஞ்சைப்போல சுருண்ட விரல்களும் வடிவான மூங்கில்குருத்துப்போல கால்களும் என்ன செப்பம்... தொட்டிலை நான் மெதுவாக ஆட்டிவிட்டேன். மெல்லிய கீறுபோல சிரிப்பொன்று அவள் முகத்தில் தெரிந்தது. "இஞ்ச உம்மா" பிள்ள என்ன வடிவா சிரிக்குது என்றேன். "அது மலக்குகள் பூ கொடுக்காங்க மனே" என்றா பெத்தா. சரி.. "தங்கச்சி படுக்கட்டும்... கதச்சி... கதச்சி... அரட்டவேணா" போய் தம்பியோட தண்ணிய வாருங்க மகள் என்றா உம்மா.
இந்த பெத்தா யாரு உம்மா? என்று கேட்டேன். பிள்ளைக்கு ஊதிப்பாக்க வந்திருக்காங்க என்றா. தங்கச்சிக்கு காய்ச்சல் ஒண்டுமே இல்லயே... அப்ப

எதுக்கு ஊதிப்பாக்கிற ? எனத் திருப்பிக் கேட்டேன். ‘‘கொள்ளயா கதகேட்காம சொன்னத்தச்செய் பார்ப்பம்‘‘ என கோபமாய்ச் சொன்னா.
நானும் தம்பியும் கிணத்தடியில் இருந்த சிறிய தொட்டியில் நிரப்பிய தண்ணீருக்குள் விழுந்து, விளையாடி விளையாடி தண்ணி வாத்தோம். ஆமை ஊர்ந்து ஊர்ந்து விளையாடினோம். பழுத்த பலா இலைகளைப் போட்டு மீன் பிடித்தும் விளையாடினோம்.

வாப்பா சந்தைக்குப்போய் வந்து சாயமணையில் இளைப்பாறுவதற்காக சாய்ந்திருந்தார். நானும் தம்பியும் குளித்து முடித்துவிட்டு ஒரே ஓட்டமாக வீட்டுக்குள் ஓடினோம். தம்பியை கண்ட பெத்தா ‘‘குஞ்ச‘‘ காட்டிட்டு ஓடுறான்டா என்ட பேரன் சீ..! என்று சொல்லி முக்காட்டால் முகத்த மூடிச் சிரித்தா. இவனுக்கு ‘‘சுன்னத்துக் கல்யாணம்’’ கெதியா வைக்கணும் பிள்ளேய்.. என்று உம்மாவிடம் கூவினா. தம்பி கோபத்துடன் வந்து என்னிடம் ‘‘நான் இப்படியே காட்டிட்டுத்தான் கிடப்பன்‘‘ என்றுட்டு கொடுத்த உடுப்பை மூலையில தூக்கி எறிந்தான்.

உம்மா குட்டிச் தங்கச்சிய கழுவுவதற்கு சுடு தண்ணி எடுத்து வைத்துக் கொண்டிருந்தா. திண்ணயில குளிக்காமல் இண்டைக்கு அறைக்குள்ள தண்ணிவாக்கப் போறிங்களா உம்மா? எனக் கேட்டேன். அதற்கு என்ன கிட்ட ரகசியமான குரலில் கூப்பிட்டு யாருக்கும் கேட்காம காதுக்குள் மெதுவா ‘‘நல்ல பிள்ள மாதிரி தம்பிய கூட்டிக்கிட்டு பெரியம்மா வீட்டுக்குப் போயிட்டு வாங்க... இருவருக்கும் காசு தருவன். கொஞ்ச நேரம் ஊஞ்சல் விளையாடிட்டு வாங்க’’ என்று சொன்னா. ‘‘எனக்கு ஏலா’’ எனக்கேலாம்மா... என்று சிணுங்கினேன். என்ன முதுகில் பிடிச்சி... சொன்னதக் கேளு என்று தள்ளிவிட்டா. வாப்பா இருந்ததால் நான் சத்தம்போடல்ல. திரும்ப திரும்பத் என்ன எதுக்கு உம்மா துரத்தி விடுகிறா என யோசித்த படியே தம்பிய சமாதானம் செய்யப்போனேன். அவன் இப்பவும் கால்கள அகட்டிப்போட்டவனாக முகத்தை நீட்டிக் கொண்டு அழுது கொண்டிருந்தான்.

உம்மா தந்த காசை தம்பியிடம் கொடுத்து உடுப்பையும் அவனுக்கு போட்டுவிட்டேன். தம்பியிடம் கடைக்குப்போய் உனக்குப் விருப்பமான ‘‘உதக்காய் விழாங்கா வாங்கிச் சாப்பிடுகிளி... நல்லபிள்ளலா... கொஞ்சநேரம் பெரியம்மா வீட்டபோய் விளையாடு நான் சுணங்கி வாறன் சரியா‘‘ என்று அவனை சமாளித்து அனுப்பி வைத்தேன். நான் சத்தம்போடாம அந்த அறைக்குள்ள கதவைச் சாத்திக்கொண்டு ஒளிஞ்சிருந்தன்.

தங்கச்சி எழும்பி குழர்ற சத்தம் கேட்டிச்சி. வழமையா அவள் குழறினா உம்மா என்னத்தான் கூப்பிடுவா. இல்லாட்டி வாப்பாவத்தான் கூப்பிடுவா... இந்த

வாப்பா ஏன் ஒன்றும் தெரியாத மாதிரி இருக்கிறார் என்று யோசனையாக இருந்தது.

பெத்தாவும் உம்மாவும் தங்கச்சியின் அறைக்கதவை பூட்டிக்கொண்டார்கள். தொடர்ந்து அழுதுட்டே இருந்தாள். நேற்று உம்மா சொன்னா "தங்கச்சிட நாற்பதாம் நாளுக்கு உனக்கும் தம்பிக்கும் புது உடுப்புத் தாற. கோழிக் கறியும் கல்யாணச் சோறும் ஆக்கிற" என்றெல்லாம் சொல்லிட்டு. அதையெல்லாம் செய்யாம கதவ பூட்டிக்கிட்டு என்னான் செய்றாவோ? தங்கச்சிட குழறுவ கூடிக்கிட்டே போகிறது. விறைச்சி விறைச்சி குழறும் சத்தம் கேட்கயில் எனக்கிண்டா உயிர் போயிடும்போல் கஸ்டமா இருக்கி. உம்மாட குரலைவிட அறையிலிருந்து அந்தக் கிழவியின் குரல்தான் கேட்குது.

வாப்பாவோ வாசலில் போய் நின்றுட்டு சிகெரட்டை அவசர அவசரமாக ஊதுகிறார். கதவுட இடைவெளியால பார்த்துக்கிட்டிருந்தேன். உம்மா திடீரென கதவைத் திறந்து ஓடி வந்தா... வாப்பாவக் கூப்பிட்டு "இஞ்ச... நல்ல புது ப்லேட் ஒன்டு கெதியா தாங்க" என்று கேட்டா. அவர் உடனே வந்து கிணத்தடி பூக்கல்லுக்குள் கையவிட்டு அவரது சேவிங் பெட்டிக்குள் இருந்து எடுத்துக் கொடுக்க... உம்மா குழறிக்கொண்டு உள்ள திரும்பி ஓடுறா. தங்கச்சிட குரல் வீறிட்டுக் கேட்கிது. உம்மா வெளியே வந்து ஜன்னல் கம்பியில தலையை முட்டி முட்டி குழர்றா. எனக்கும் குழறுவதான் வருகிது. வாயைப் பொத்திக் கொண்டு சத்தம் வராம குழறிட்டே நின்டேன். ஏதோ ஒரு பயத்தில என்ட கால்களும் நடுங்கிது. அந்த நாசமத்துப்போன கிழவிய அல்லாஹ் நரகத்தில்தான் தூக்கி எறிவான் என மனசுக்குள்ளே முனிகிறேன். சிறிது நேரத்தில் கதவைத் திறந்து "முடிஞ்சிட்டு ஒரு பிரச்சினயுமில்ல மகளே" என்றபடி அழுகின்ற என் தங்கச்சியை உம்மாவிடம் கொடுக்கின்றா. ஏங்கி... ஏங்கி... கத்தி குழறினதால தங்கச்சிட குரல் கம்மி தேய்ந்துபோயிட்டு, உம்மாட தோளில் அறுத்த கோழியின் கழுத்துப்போல தங்கச்சிட தலை கெழிஞ்சி கிடக்கு...

"முதல்ல தண்ணிய வாரு புள்ள" என கிழவி சொல்ல உம்மா சரி மாமி என்று எழுந்து. ஒரு வட்டாவை கொண்டு வருகிறா. அதில வெத்தில பாக்கு பழம் காசு துணி எல்லாம் இருக்கி. அதை கிழவிக்கிட்ட கொடுக்கிறா. எல்லாத்தையும் சுருட்டி வேக்கில்போட்டு எடுத்துக் கொண்டு "அல்லாஹ் ரஃமத்துச் செய்யட்டும்" நான் போய்வாறன் என்றவ முந்தானையால ஒரு நீண்ட முக்காட்டை இழுத்துப்போட்டு வெளியேறிப் போகிறா.

நன்றி: *anarsrilanka.blogspot.fr*

# பேசவிரும்பாதிருந்த இப்பேசும்பொருள்
## தொடர்ந்து விவாதிக்கப்படட்டும்!

• ஃபாத்திமா மாஜிதா




இந்தப் பதிவினை எத்தனை எத்தனையோ பெண் மழலைகளின் அழுகைக்குரல் உண்டாக்கிய, உண்டாக்குகின்ற துயர உணர்வோடும் பதட்டத்துடனுமே எழுதுகிறேன்.

சமீபத்தில் வாசிக்கக் கிடைத்த அனார் எழுதிய 'பிலேட்' எனும் சிறுகதை, *nasheeha mohideen* , *Lafees* போன்றோரின் முகநூல் பதிவுகள், ஆக்காட்டியில் வெளியான *Farhan* உடனான நேர்காணல், இவையெல்லாவற்றிற்கும் உருண்டு திரண்டு வந்த எதிர்ப்பலைகள், மனித தன்னுணர்வு மிக்கவர்களின் உணர்வுபூர்வமான கருத்துக்கள் என நிறைய புனைவு – அபுனைவு சார்ந்த விடயங்கள் என் மனத்திரையில் நிழலாடியபடியிருக்கின்றன.

இலங்கை முஸ்லீம் சமூகத்தினுள் பெண் குழந்தைகளின் கிளிட்டோரிஸ்

எனும் பகுதியைத் துண்டிக்கும் அல்லது சிதைக்கும் கொடூரச் சடங்கு முன்னொரு காலத்தில் இருந்ததாகவும் இப்பொழுது அருகி விட்டதாகவும் அல்லது இஸ்லாத்தில் பெண்களின் கத்னாவாக இம்முறை அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் மிகச் சாதாரணமாக கடந்து செல்பவர்கள், சிறு குற்றஉணர்வும் இன்றி இக்கொடுமையை மறுதலிப்பவர்களின் பதற்றங்கள், மிரட்டல்கள், கேலிப்பேச்சுக்கள் என பட்டியல் நீண்டு கொண்டிருக்க, மனித உரிமை மீறலாகவும் பெண்களுக்கெதிரான வன்முறையின் வடிவமாகவும் நிகழ்ந்து கொண்டிருக்கும் இச்செயலானது சில பிரதேசங்களில் அருகியுள்ளதாகவும் சில பிரதேசங்களில் தொடர்ந்து ரகசியமாக நடைமுறையில் நடைபெற்று வருவதாகவும் உறுதியாக கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

ஆக, திரைக்கு பின்னால் என்ன நடைபெறுகிறது, ஏன் மறுக்கப்படுகின்றது, எதற்காக முற்றாக இல்லை எனத் தொடர்ந்து விதண்டாவாதம் செய்கின்றீர்கள். ஒன்று மட்டும் உண்மை! எல்லாச் சமூகத்தினுள்ளும் பெண் பாதிப்புக்குள்ளாகின்றாள். ஆனால் அங்கு எதிர்த்து குரல் கொடுப்பது எமது சமூகத்தினுள் இருந்து குரல் கொடுப்பது போல் அவ்வளவு சிக்கலில்லை.
என்னிடம் பிற சமூகத்தினைச் சேர்ந்த தோழியொருத்தி , இது பற்றி அறிந்த பொழுது ஏன் எல்லோரும் வாய் மூடி இருக்கின்றீர்கள், ஒரு குழந்தை அழுதாலும் அதனை சகித்துக்கொண்டு இருக்க முடியுமா? அது நிறுத்தப்படவேண்டிய ஒன்றுதானே என அனல் தெறிக்கக் கேள்விகளை அடுக்கினாள். அவளது கேள்விகளுக்கு என்னிடம் எந்த வித விடையுமில்லை இவ்வளவு நாட்களும் வாய் மூடி இருந்த அமைதியையும் வெட்கத்தினையும் தவிர.

முடிவாக ஒன்று மட்டும் கூறவேண்டும். இக்கொடூரமான வன்முறை ஒரு குழந்தைக்கு நடந்தாலென்ன நூறு குழந்தைகளுக்கு நடந்தாலென்ன. குற்றம் குற்றம்தானே.

எனது எழுத்துக்களில் இப்பெண் குழந்தைகளின் அழுகைக்குரலும் வலியின் வேதனைகளுமே நிரம்பப்பெற்றுள்ளது. இச்சமூகம் பேசாதிருந்த அல்லது பேசவிரும்பாதிருந்த இப்பேசும்பொருள் தொடர்ந்து விவாதிக்கப்படட்டும். தொடர் விவாதங்கள் எம்மழலைகளின் அழுகைக்குரல் இனியும் வராது காக்க அணை கட்டவேண்டும் என்பதே என் பெருவிருப்பம்.

*28.04.2017 ஃபேஸ்புக்கில்..*

# பெண் விருத்தசேதனம் அல்லது பெண் பாலியல் உறுப்பு சிதைத்தல் அல்லது பெண் பாலியல் உறுப்பு வெட்டுதல்

• நஸீகா முகைதீன்

*நிறையுருவாக என்னுடலை கடவுள் படைத்தபடியே நான் பிறந்தேன். ஆண்கள் என்னை கொள்ளையடித்துக்கொண்டார்கள். எனது சக்தியையும் திருடிக்கொண்டார்கள். என்னை எதற்கும் இயலாத முடமாகவும் கைவிட்டார்கள். எனது பெண் பருவம் கன்னமிடப்பட்டுவிட்டது. என்னிலிருந்து போக்கப்பட்ட எனது உடற்பாகங்கள் கடவுளுக்கு தேவைப்பட்டிருந்தால் ஏன் அதனை அவர் படைத்திருக்க வேண்டும். எந்தப் பெண்ணும் இந்த வலியை உணராத நாள் ஒன்று உதயமாக வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். உனக்குத் தெரியுமா பெண்கள் பாலியல் உறுப்பு சிதைத்தல் சோமாலியாவில் தடைசெய்ப்பட்டுவிட்டது என்று மக்கள் சொல்லக் கேட்க வேண்டும். அடுத்த தேசம், அப்படியே அடுத்த தேசம், அதற்கு அடுத்த தேசம் இந்த தடை பரவ வேண்டும். பெண்களுக்கான பாதுகாப்பான உலகம் ஒன்ற ஏற்படும் வரை.*

*Waris Dirie (Desert Flower: The Extraordinary Journey of a Desert Nomad)*

பெண்விருத்தசேதனமானது பெரும்பாலும் பாரம்பரியமாக விருத்தசேதனம் செய்யும் பெண்ணகளால், பெண்களின் வீடுகளிலேயே பாதுகாப்பற்ற, சுகாதாரமற்ற முறைகளில் பெரும்பாலும் மயக்கமருந்து இன்றியே நிகழ்த்தப்படுகின்றது. சிலவேளைகளில் சில நாடுகளில் அல்லது பிரதேங்களில் முடிதிருத்தும் ஆண்களினாலும் இது நிகழத்தப்படுகின்றது. எகிப்து போன்ற நாடுகளில் மருத்துவர்களினாலும், சுகாதார பணியாளர்களாலும் 77 சதவீதத்திறகு மேல் பாதுகாப்பாக செய்யப்பட்டாலும், இன்றும் கிராமங்களிலும், பல்வேறு பிரதேசங்களிலும் கத்தி, கத்திரி, கண்ணாடித் துண்டுகள், பிளேடுகள் கொண்டு சுகாதாரமற்ற முறைகளில் பெண்கள் விருத்தசேதனம் நிகழத்தப்படுகின்றன.

பெண் விருத்தசேதமானதுபின்வருமாறு வரையறுக்கப்படலாம். “கலாசாரத்திற்காக அல்லது மருத்துவ காரணங்களுக்கு அப்பால் பாலியல் பிறப்புறுப்பின் வெளிப்புற உறுப்பின் பகுதிகளை பகுதியாக அல்லது முழுமையாக அகற்றுதல் அல்லது அவற்றில் காயத்தை ஏற்படுத்துதல். இது பெரும்பாலம் நான்கு வகைப்படும்.

*1)* கிளிற்றோரிசை நீக்காமல் அதில் சிறுபகுதியை வெட்டுதல்
*2)* கிளிற்றோரிசை வெட்டி. அதை முற்றாக நீக்குதல்.
*3)* கிளிற்றோரிஸ், சிறுபிற்சொண்டு,பெரும் பிற்சொண்டு போன்றவற்றை நீக்குதல்
*4)* கிளிற்றோரிஸ், சிறுபிற்சொண்டு,பெரும் பிற்சொண்டு போன்றவற்றை வெட்டி, காயங்களை சேர்த்து தையல்போட்டு யோனித்துவாரத்தைமூடி, ஒரு சிறு துவாரத்தின் மூலம் சிறுநீர், மாதவிடாய் இரத்தம் வர அனுமதித்தல்.
மேற்சொன்னவகைகளில் எங்களுடைய நாட்டில், முதலாவதும், இரண்டாவதும் நடைமுறையில் உள்ளது போல் தெரிகிறது. மூன்றாவது நான்காவது வகைகள் இலங்கைக்கு அப்பால் பெரும்பாலும் ஆபிரிக்க நாடுகளிலேயே நடைமறைகளிலுள்ளவையாக இருக்கின்றன.
மூன்றாவது, நான்காவது வகையே மிகப் பாரதூரமான பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது. இவைகள் பெரும்பாலும் ஆபிரிக்க நாடுகளிலேயே நடைமுறைகளிலள்ளன. தற்போதைய கணிப்பின்படி ஆபிரிக்காவில் *140* மில்லியன் பெண்கள் இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வருடமும் *3* மில்லியன் பெண்கள் இதற்கு உட்படுத்தப்படுகிறார்கள்.
மதத்தின் கலாச்சாரத்திதன் பெயரால் செய்யப்பட்டாலும், இவற்றால் சுகாதார ரீதியாக எந்த நன்மையும் ஏற்படுவதில்லை என்று கருதப்படுகின்றது. மேலும் இவற்றால் குறுகியகால, நீண்டகால பிரச்சினைகள் காணப்படுகன்றின்றன. உடல், உணர்வு ரீதியான பாதிப்புக்கள் வாழ்க்கைபூராக காணப்படும். ஆபிரிக்க நாடுகளில் கருவேல மரங்களின் முட்கள் கொண்டு யோனித்துவாரங்கள் தைத்து மூடப்படுகின்றன. பாதுகாப்பற்ற முறையில் நிகழத்தப்படும் இதனால், யோனித்துவாரங்கள் சிறிதாக்கப்பட்டு, சிறுநீர், மாதவிடாய் இரத்தங்கள் வெளியேறுவது கடினமாக்கப்படுகின்றது. வீக்கம், இரத்தப்போக்கு, வலி, சிறுநீர்கழிக்க முடியாமை, காயத் தொற்று, குருதிச்சோகை, சிறுநீர்த்தடத் தொற்று, செப்ரிசீமியா, ஏற்புவலி, பல வகையிhன தொற்று நொய்கள், தோல் நோய்கள், புண்கள் கட்டிகள், காயங்கள், சீழ்கட்டிகள், கருப்பைக் கழுத்து புற்றுநோய்கள் போன்ற பிரச்சினைகள் பெண்களுக்க ஏற்படுகின்றன.
தொற்றுநீக்கப்படாத உபகரணங்களைப் பாவித்து இது நிகழ்த்தப்படுவதனால் ஹெப்பாறிற்றிஸ் ஏ, பீ, எய்ட்ஸ் போன்ற நோய்களின் தாக்கம் ஏற்படுகின்றன. கருவுறுவதும், பிள்ளைப்பேறும் மிகுந்த சிரமத்திற்குள்ளாக்கப்படுகின்றன. உளவியல் ரீதியாக கவலை, மனஇறுக்கம், மனத் தளர்வு, அதிர்ச்சி போன்ற பல்வேறு தாக்கங்களுக்கும் உட்படுகிறார்கள். சில பேர் இறந்தும் விடுகிறார்கள். இந்த பெண்கள் விருத்தசேதனமானது. பல நாடுகளில் சட்டவிரோதமானதாகக ருதப்படுகின்றது.

ஐஎஸ்ஐஎஸ் தாங்கள் பிடித்தவைத்துள்ள நாடுகளிலும், நிலப் பிராந்தியங்களிலும்